சிவமயம்

REGISTERED AS A NEWSPAPER IN CEYLON
P. M. G. No. H. A. 19/300 of 1939

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருகூ] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஹூ கார்த்திகை மீ ந உ (1947 நவம்பர் 18 செவ்வாய்க்கிழமை) [ இல சுகூ

## பிரார்த்தனை

திருச்சிற்றம்பலம்

ஆதிபா னரியயனென் றறிய வொண்ணு
வமரர்தொழுங் கழலானை யமலன் றன்னைச்
சோதிமதி கலைதொலையத் தக்க னெச்சன்
சுடரிரவி யயிலெயிறு தொலைவித் தானை
ஓதிமிக வந்தணர்க ளெரிமூன் றோம்பு
முயர்புகழார் தருமோமாம் புலியூர் மன்னும்
நீதிதிரு வடதளியெஞ் செல்வன் றன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே.

—அப்பர் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

# விளக்கீடு

(சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம், B. A.)

விளக்கீடென்னுந் திருவிழா சிவபெருமானே முதற்கடவுளென்பதை விளக்குவது; அவர் பிரம விஷ்ணுக்களுக்கு ஞான ஒளி வடிவாகத் தம்மைக் காட்டிய திருவருளே இந்த நாளிற் கொண்டாடப்படுவது. அதற்காகக் கோயில்களிலும் வீடுகளிலும் மற்றுமிடங்களிலும் பெருந்தொகையான விளக்குகள் ஏற்றப்படுகின்றன. கோயில் வாயிலிற் பெருநெருப்புண்டாக்கப்படுகின்றன. அதற்குச் சொக்கப்பனையென்று பெயர். இது கார்த்திகை மாதத்திலே வரும் பூரணையிற் செய்யப்படுவது. (சொக்க என்பது சுஷ்க என்பதன் திரிபென்பர்; சுஷ்க=உலர்ந்த.)

§ விளக்கீடு=விளக்கு+ஈடு (=இடுதல்) =விளக்குகள் வைத்தல்,

பூசைமுறை: முதல்நாள் சாயங்காலம் மங்கல கிரியைகளை முடித்துச் சிவாக்கினியுண்டாக்கி ஒன்பது தகழிகளிலே அந்த அக்கினியைப் பூசித்து வைத்தல்வேண்டும். விளக்கீட்டு நாளிலே கோயிலின் முன்பாக ஒரு உயரமான மரத்தை* நாட்டி அதைச் சுற்றித் தகழிகள் வைத்தற்குச் சலாகைகள் பொருத்திக் காய்ந்த ஓலை§ முதலியவற்றால் வட்டமாக அடைத்து விடுக. பொழுதுபட்டபின்பு சிவபெருமானை எழுந்தருளச் செய்து அந்த மரத்துக்கு முன்னே நிறுத்தி அந்த மரத்திலே சிவபெருமானைப் பூசிக்க ஒன்பது தகழிகளில் ஒன்றை மரத்தின் நுனியிலும், மற்றவைகளை மரத்தைச்சுற்றி எட்டுத் திக்குகளிலும் வைக்க. அந்தத் தகழிகளிலேயுள்ள நெருப்பானது சுற்றியிருக்கும் இலைகளிலே பிடிக்க முழுவதும் எரியும். அந்த மரமும் ஒளியும் சிவபெருமானுடைய சோதி ரூபத்தைக் குறிக்கும். எரிந்த சாம்பலைச் சிவபெருமானுக்குச் சாத்தி அடியார்களுக்குங் கொடுக்க. பின்பு மரத்தைத் தறித்துவிடுக. 2

* தென்னை, பனை, மூங்கில், சண்பகம், வில்வம் முதலிய மரங்களில் ஒன்று.

§ தென்னை, பனை, கமுகு, வாழை முதலியவற்றின் இலை,

2 உத்வ...சனக்கிரமம்போலும் மேலே மூன்றுபங்கும் கீழே இரண்டு பங்குமாகத் தறிக்க.

சிவபெருமான் பிரம விஷ்ணுக்களுக்குத் தோன்றிய கதை பின் வருமாறு அருணாசல புராணத்திற் சொல்லப்பட்டிருக்கிறது: பிரமதேவர் செருக்குக் கொண்டு தாமே முழுமுதற் கடவுளென் றெண்ணி விஷ்ணுவிடம் போய்த் தம்முடைய பெருமைகளைச் சொன்னார். விஷ்ணு பிரமாவைத் தாழ்த்திப் பேசினர், இதனால் இருவருக்குமிடையிற் சண்டை உண்டாயிற்று இவர்களுடைய விரோதத்தைத் தீர்க்கவேண்டுமென்று தேவேந்திரன் சிவபெருமானுக்குமுறையிட்டான். அப்போது சிவபெருமான் நெருப்பு வடிவமான ஒரு மலைபோல இருவருக்குமிடையிலே தோன்றினர். 3 பிரம விஷ்ணுக்கள் அதைக் கண்டு அஞ்சினர்; அது மிகப்பெரிதாயிருந்தபடியால் அதன் அடியையேனும் நுனியையேனும் காண்பவரே தங்களுக்குட் பெரியவராவரென்று தீர்த்தனர். விஷ்ணு அந்த நெருப்பு மலையின் அடியை அறிந்து வருகின்றேனென்று பன்றி வடிவாகப் பூமியை அகழ்ந்து கீழே சென்றார் பிரமா நுனியைக்காணுதற்காக அன்னவடிவத்தோடு மேலே பறந்து போனார். விஷ்ணு அடியைக் காணமாட்டாதவராய் வலியிழந்து இது பரம்பொருளாகிய சிவபெருமானுடைய தோற்றமே என்றும் அதன் நுனியைப் பிரமா காணமாட்டாரென்றும் நிச்சயித்துக்கொண்டு மகிழ்ச்சியோடு பூமிக்குமேல் வந்தார். பிரமா முடியைக் காணுதிருக்கவுந் தமது அகந்தையினால் அதைக் கண்டதாகச் சொன்னார். அப்போது பிரமாவினுடைய ஆணவ வலியைக் கெடுத்தற்காகச் சிவபெருமான் நேரே தோன்றி அவரைக்கண்டித்து இருவருக்கும் அருள் செய்தார். அந்த அக்கினியைக் காட்டும் மலை (அருணாசலமாகிய) திருவண்ணாமலையாம். இந்தப் பேரருள் கார்த்திகை மாசத்திலே கார்த்திகை நட்சத்திரத்திலே எவர்களும் பெறத்தக்கது இந்த ஒளியைக் குறித்தற்காகவே சைவ நாடெங்கும் அந்த நாளிரவில் பல இடங்களிலும் விளக்கு ஏற்றப்படுகின்றது.

3 தோன்றியநாள் மாசிமாதச் சிவராத்திரி. ஆண்டுகள்தோறும் திருவண்ணாமலையிலே தோன்றி யருள் செய்யும நாள் கார்த்திகைப் பூரணை. இருவருக்கும் ஈற்றிலே அருள் செய்தநாள் இந்நாள்போலும். கார்த்திகையிற் கார்த்திகை [illegible] விசேடதினம்.

# வகுப்புவாதம் ஓர் பேய்

## அதனைக் கெடுப்பது எப்படி?

வகுப்புவாதத்தை ஒரு பேய் என்று சொல்லுவார்கள். அது ஒரு பேய் மட்டுமில்லை. பிளேக் காலராபோன்ற ஒரு கொடிய பரவு நோயுமாகும். அந்த நோய் இருக்கிறவரையில் எந்த நாட்டிலும் அமைதியைக்காண முடியாது. வகுப்புவாதம் இல்லாது ஒழிந்தாலன்றி அரசியல், சமுதாயம், வாணிபம், பொருளாதாரம், கல்வி வாழ்க்கை முதலிய எந்தத் துறையிலும் ஒழுங்கும் நேர்மையும் நிலவமாட்டாது. வகுப்புவாத நோயால் பீடிக்கப்பட்டு அவதியுற்றிருந்தமையினாலேதான் இந்தியவிடுதலையும் எட்டி எட்டிப் போய்க்கொண்டே இருந்தது. விடுதலை பெற்ற நாம் சுதந்திர மக்களாக வாழவேண்டுமானல், வகு

தொடர்ச்சி 4ம் பக்கம்

## துர்ப்பிரசாரம்

## இந்தியாவுக்கு விரோதமாக முஸ்லீம் நாடுகளிற் சூழ்ச்சி

அலகபாத்திற் பிரசுரமாகும் ஹிந்துஸ்தான் ஸ்ரான்டேர்ட் என்னும் தினசரிப் பத்திரிகையின் நிருபர் பின்வருமாறு எழுதுகிறார்:

"மத்திய கிழக்குப் பிரதேசங்களிலே இந்தியாவுக்கு விரோதமான பிரசாரம் மிகவும் மும்முரமாக நடக்கிறது; இந்தியாவிலே ஹிந்துக்களும் சீக்கியரும் சேர்ந்து முஸ்லீம்களை ஈவிரக்கமின்றி வதம்புரிகின்றனர் என்ற கட்டுக் கதையினால் முஸ்லீம்நாடுகளை இந்தியாவுக்கு விரோதமான கிளர்ச்சியில் ஈடுபடத் தூண்டப்படுகின்றன,

"இந்தியாவிலேயுள்ள 10 கோடி முஸ்லீம்களும் அநியாயமாக கொடூரமாக வதை செய்யப்படுகின்றனர். உலக முஸ்லீம்நாடுகள் உடனே பாகிஸ்தானுக்கும், இந்தியமுஸ்லீம்களுக்கும் உதவிபுரிய முன்வராவிட்டால், இந்திய முஸ்லீம்வர்க்கமே வேரோடு

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# குமாரகுருபரரின் அரும்பாடல்கள்

(திருமயிலை திருவாளர் சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை)

குமரகுருபரர் நீதிநெறிவிளக்க ஆசிரியரென்பது எல்லோரும் அறிந்ததொன்றே அவர் மூந்நூறு வருடங்களுக்கு முன்னர் திருப்பனந்தாள் காசிமடத்தைத் தாபித்தவர். பல பிரபந்தங்களை இயற்றியவர். சிதம்பர மும்மணிக்கோவை, திருவாரூர் நான்மணிமாலை, சிதம்பரச் செய்யுட்கோவை. பண்டார மும்மணிக்கோவை, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், மதுரைக்கலம்பகம், காசிக்கலம்பகம், சகலகலாவல்லிமாலை முதலியன இவரியற்றிய நூல்கள். இவையெல்லாம் சிவசம்பந்தமானவை. இவருடைய கவிகளெல்லாம், ஆழ்ந்த கருத்துக்களைக்கொண்டவை, கற்பனைகள் விசித்திரமாகக் காணப்படும். படித்து இன்புறற்பாலன. மாதிரிக்காகச் சில கவிகளை எடுத்துக் காட்டுவாம்:—

வரந்தந்தருள வரதமவைத்தா
　　மல்வரத மிகக்
கரந்தந்ததாலிவர் கையதனறே
　　பலிகாத வித்துச்
சிரந்தந்த செங்கைக் கமலேசர்
　　நாமந் தியாகரென்பது
அரந்தந்த வாள்விழியாள் தந்ததாங்
　　கொலறம் வளர்த்தே.

தியாகேசர் என்னும் நாமம் பிச்சையேற்பவராகிய இவருக்கு ஏற்றதன்று. அறம் வளர்த்த தேவி இவர் இடப்பாகத்தில் இருப்பதால் இப்பெயர் இவருக்கு வந்ததுபோலும், வரதம் அபயம் என்னும் இரண்டு கைகளுள் வரதம் வாமபாகத்தைச் சேர்ந்ததால் அதுவும் இவருடைய கையல்லவே. தேவியின் கையே. தியாகேசருடைய கை பிச்சைக்கபாலத்தை யேந்திய கையே ஆகும்.

[illegible] ழுங்கமலை நாதனே
நாதனெனக்

கல்லாதார் சொல்லுங் கடாவிற்கு—
　　வெல்லும்
விடையே விடையாக மெய்யுணா
　　ரகையுற்
றிடையே மயங்கு மிதுவென்.

சிவபிரான் தேவதேவனென்பதற்குச் சாட்சி திருமால் இடபமாக அவரைத் தாங்குதலே சாலும் என்றவாறும்.

கடகரியும் பரிமாவுந் தேருமுகந்
　　தேறாத
இடபமுகந் தேறியவா றெனக்
　　கறியவியம்பேடீ
தடமதில்க ளவைமூன்றுந்
　　தழலெரித்த வந்நாளில்
இடபமாதய்த் தாங்கினான் திருமால்
　　காண் சாழலோ.

என்னுந் திருவாசகக் கருத்தைக் கொண்டது இச்செய்யுள்.

வைமுழுது முழுதுண்ணவல்லாற்
　　களித்து நவநிதியும்
கையிலொருவற் களித்தெமக்கே
　　கதிவீடளித்தோர் கன்னிகைக்கு
மெய்யிலொரு கூறளித்தனரால்
　　விமலா தமலைத் தியாகரென்பது
ஐயரிவர்க்கே தகுமுகமனன்று
　　புகழுமன்றுமே.

நிலம், நிதி, வீடு, உடம்பில் ஒரு பாகம் ஆகிய இவற்றை இறைவன் பிறருக்கு ஈந்தமையின், இவரைத் தியாகரென்று கூறுதலும் பொருத்தமுடையதே. உபசாரமும் புகழ்ச்சியுமல்ல.

கூடுங்கதி யொருகாற் கும்பிட்டாற்
　　போதுமென
நாடும்விநயத்தை நண்ணிற்றல்—
　　ஒடியகட்
காதனுர் காணவொரு காட்டிக்
　　கையமைத்து
நாதனுர் செய்யு நடம்.

நடராசப்பெருமானை ஒருதரம் தரிசித்தால் முத்திப்பேறடையலாமென்பது கருத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்து ௵
கார்த்திகை ௨ செவ்வாய்க்கிழமை


## கந்தசஷ்டி காலத்திற் கந்தவேளை வணங்குக

II

தீயவை புரிந்தாரேனும் குமரவேள்
திருமுன்னுற்றல்
தூயவராகி மேலைத் தொல்கதி
யடைவ ரென்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ?
அடுசமர் இந்நாட் செய்த
மாயையின் மகனுமன்றே! வரம்பிலா
அருள்பெற் றுய்ந்தான்.

சூரபன்மன் சுப்பிரமணியக் கடவுளைத் தரிசனஞ் செய்யப் போனவனல்லன், அப்பெருமானோடு மாறுபட்டுப் போர் செய்யப் போனவன்; ஆனல், அவனை முருகவேள் ஈற்றில் எப்படியாக்கினர்? தம்மைச் சுமக்கும் வாகனமாகிய மயிலாகவும் தன் மனோவேகப் பொற்றேரின் கண்ணே விளங்கும் கோழிக் கொடியாகவும் ஆக்கி யருளினரல்லரோ! மாயையின் காரியமாகவுள்ளவன் சூரபன்மன் என்பது தொனிகக, வேறு பெயராற் சொல்வதின்றி, ஆசாரிய சுவாமிகள் அவனை மாயையின் மகனென்கின்றார்; மாறுபட்டுத் தந்திருமுன்னிலையை யடைந்த சூரபன்மனுக்குப் பூரண அநுக்கிரகஞ் செய்து அவனை ஆட்கொண்டருளிய பெருமான், புண்ணியங்களன்றிப் பாவங்களைச் செய்தவர்களும் தம்முடைய சந்நிதியில் வரநேர்ந்தால் அவர்களுக்குத் தாமாகவே அருள் புரிவராம்; கடல்பெருகி அலைமோதுங் காலத்தில், அக்கடற்கரையில் குளிக்கும் நோக்கத்தோடு போனவரையும், குளிக்கும் நோக்கமின்றி அக்கடற்கரைக்குச் செல்பவரையும் பேதமின்றிக் கடலின் திரை நனைத்துவிடு மல்லவா? அதுபோலவே, முருகன் திருவருள் பெருகிய புண்ணிய தினங்களில் அப்பெருமானுடைய சந்நிதியில் அவனை வணங்கும் நோக்கங்கொண்டுபோவோரும்; அந் நோக்கமின்றிப் போவோரும் அப் பெருமானுடைய திருவருளுள் அகப்பட்டுத் தூயவராவராம்; இந்த விசேடத்தினாலேதான் வாளாமுன் எனக் கூறுது "திருமுன்" என்றார்.

செந்திலாண்டவன் சமுகத்திலோ, ஆனமையினால், கதிர்காமத்தையன் சந்நிதிக்கோ, நல்லூர்க்கந்தன் திருமுன்போ, மாவிட்டபுரத்துச் சண்முக மூர்த்தி முன்போ, கந்தவன நாதன் முன்போ, செல்வச்சந்நிதியான் முன்னிலையிலோ சூரசம்மாரப் புண்ணிய தினமாகிய இற்றைத் தினத்திற் போய்ச் சேர்ந்துவிட்டால், அப்படிப் போகும் நாம் வேறு நோக்கங்களோடு போனலும் இரும்பைக் காந்த மிழுக்கின்றவாறு, முருகமூர்த்தி திருவருள் தன்னிடஞ் சேர்வோரை இழுத்துத் தூயவராக்கு மென்பது நிசம்.

முருகப்பெருமானைத் தரிசிக்க வேண்டு மென்னும்ஆசை ஒருவருள்ளத்திலே பிறக்குமானல், அந்தப் பெருமான் அப்படி ஆசைகொண்டார்க்கு வருமிடையூறெல்லாம் நீக்கித் தமது தரிசனத்தை யருளுவரென்பதும் நிச்சயம்; எங்கள் கந்தவேளுக்கும் உலக மாதாவாகிய தெய்வநாயகி யம்மையார்க்கும் திருக்கல்யாணம் நடந்த காலத்திலே, தேவர்கள், முசுகுந்தச் சக்கரவர்த்தி முதலாம் பூவுலகத்தரசர்கள்,இன்னும்உலகத்திலேயுள்ள அன்பர்களெல்லோரும் அந்தத்தெய்வீகம் வாய்ந்திருந்த திருக் கல்யாணத்தைத் தரிசிக்க ஆவல்கொண்டு திருப்பரங்குன்றத்திற்குப் போனர்களாம்; உலகத்திலே தீவினையின் மேலீட்டினல், அங்கவீனர்காளாகப்பிறந்தலைவோருமுண்டல்லவா? பிறவி தொடக்கம் கையில்லாத அங்கவீனர், முருகனையும் பிராட்டியையும் அந்தக் கல்யாணக் காட்சி நேரத்திலே கைகூப்பிக் கும்பிடுவதற்குக் கையில்லையென்று கவலைப்பட்டார்களாம்; காலில்லாதவர்களாகிய சப்பாணிகள் திருப்பரங் குன்றத்திற்கு நடக்க வகையில்லையேயென்று சிந்தை நொந்தார்களாம்; நோய் வயோதிகம் முதலியவற்றல் தேகவலிமை கெட்ட நொய்யவர்கள் அக் காட்சிக்குத் தாங்கள் எப்படிப் போக முடியுமெனத் துயரப்பட்டார்களாம்; ஊமர்களா யுள்ளார்கள், நாம் பெருமானையும் பெருமாட்டியையும் தரிசனஞ்செய்தாலும் அவர்களைத் தோத்திரஞ் செய்வதற்கு நாவெழாதே யென்று துக்கப்பட்டனராம்; குருடர்களா யுள்ளவர்கள் எண்ணரிய பிறவிதனில் உயர்ந்த பிறவியாகிய மானுடப் பிறவியை யெடுத்தும் கந்தக் கடவுளையும் தெய்வநாயகியையும் தரிசிக்கும் பேற்றைப் பெற்றிலோமே யென்று கலங்கினர்களாம். அப்பொழுது சண்முகப்பெருமான் செய் தருளியதென்ன?

"கையிலார் கைகள் பெற்றுங்
காலிலார் கால்கள் பெற்றும்
மொய்யிலார் மொய்கள் பெற்றும்
மூங்கைகள் மொழியைப் பெற்றும்
மையல்சேர் குருடரானோர்
வாள்விழி பெற்றுஞ் சென்றர்
ஐயன்மேல் உள்ளம் வைத்தார்க்(கு)
அனையதோ அரிது மாதோ?"

[மொய்யிலர் – வலிமை கெட்டவர்; மூங்கைகள் – ஊமர்கள்; வாள்விழி - ஒளியோடுகூடிய கண்கள்]

அந்த அங்கவீனர்களெல்லாம் தத்தம் அங்கங்கள் பூரணர்களாகப் பெற்று முருகப்பெருமானுடைய திருக்கல்யாணத்தைத் தரிசித்து ஈடேறுதற்குக் காரணமாக நின்றதென்ன? முருகையன்மேல் அவர்கள் வைத்த திடபக்தி யல்லவா?

இங்குள்ள மக்களெல்லாரும் கார்காலமாகிய ஐப்பசி கார்த்திகை மாசங்களிலே மழைதூறவுமில்லை யென்று ஒருவரோடு ஒருவர் பேசிக் கவலைப்படுகிறர்கள்; இவர்களெல்லாரும் கையில் வெண்ணெய் வைத்துக் கொண்டு நெய் தேடுந் தன்மையினர்; முருகன் தங்கள் தங்கள் வழிபடுந் தெய்வமாக விருக்க, அவனை மறந்து மழையில்லை யென்று கவலைப்பட்டால் மழை பெய்துவிடுமா? அருள் மழை பெய்யும் அறுமுகவனைப் பத்தி பூர்வமாக இரந்து மழைபெய்ய வேண்டு மென்று பிரார்த்தித்தால், மழை பெய்யாமல் விட முடியுமா?

"கந்தவேள் முகங்கள் வாழி
கரங்கள் பன்னிரண்டும வாழி
பைந்தொடை மார்பம் வாழி
பங்கயச் சரணம்வாழி
இந்திரன் புதல்வி வாழி
எயினர்தந் குமரிவாழி
மைந்துடை மஞ்ஞை சேவல்
வாழிமெய் யடியார் வாழி."

## இலங்கைச் சுதந்திர மசோதா

இலங்கைக்குப் பூரண பொறுப்பாட்சி வழங்குதற்கான மசோதா ஒன்று சென்றவாரம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் எடுத்தாளப்பட்டிருக்கிறது. வருகிற வியாழக்கிழமை அது இரண்டாம்முறையாகப் பாராளுமன்றத்தில் எடுத்தாளப்படும், இன்று அதிகாரம் வகிக்கும் தொழிற்கட்சி யரசாங்கத்துக்குப் பாராளுமன்றத்திற் போதிய பலமும் ஆதரவும் இருக்கிறபடியினுல், அது அதிக கஷ்டமின்றி நிறைவேறிவிடும் என்று எதிர்பார்க்கலாகும்.

இச் சுதந்திர மசோதாவைப்பற்றியும், அதற்காதாரபூர்வமான உடன்படிக்கைகளைப்பற்றியும் பலவிதமான அபிப்பிராயங்கள் கூறப்பட்டு வருகின்றன. இலங்கையில் இன்று அதிகாரம் படைத்திருக்கும் ஐ. தே கட்சியினரும் அவர்களை ஆதரிக்கும் பத்திரிகைகளும் இச்சுதந்திர மசோதாவை வரவேற்கின்றனர். குறித்த உடன்படிக்கைகள், இலங்கை யரசாங்கம், பிரிட்டிஷ் அரசாங்கம் என்னும் இருசாராரினதும் மனத்தொருமித்த ஒத்துழைப்பினுல் ஏற்பட்டனவேயன்றி, பிரிட்டிஷ் அரசாங்கத்தால் இலங்கைமீது பலவந்தமாகப் புகுத்தப்படவில்லை என்றும், எமக்குத் தேவையில்லை எனக் காணும்பட்சத்தில், அந்த உடன்படிக்கைகளை நிராகரிப்பதற்கு இலங்கைக்குப் பூரண சுவாதீனம் உண்டு என்றும் இவர்கள் கூறுகின்றனர். இலங்கையைப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் வாலில் கட்டிவிட்டு, அவ்வேகாதிபத்தியம் ஆடுமாட்டியத்துக்குத் தாளம் போடும் கேவல நிலைமையில் இந்நாட்டை இன்று அதிகாரம் படைத்துள்ள சேனநாயக்காக்கோஷ்டியினர் ஆக்கிவிட்டனர் என்று இடதுசாரிகள் கூறுகின்றனர். இடதுசாரிகள் கூற்றும் அவர்களது லட்சியமும் படாடோபமானதுதான்; மிக உந்நதமானதுதான். ஆனுல் இன்றுள்ள உலகநிலைமையிலும், இலங்கையின் அமைப்பு நிலையிலும், இந்த உடன்படிக்கைகள் பிற்போக்கானவை என்றே அல்லது அவை இலங்கையை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு அடிமைத்தனமாக்குவதென்றே நாம் கருதத் தயாரில்லை. சின்னஞ்சிறிய இலங்கை, இன்றுள்ள சூழ்நிலையில் ஒர்போதும் தனித்தியங்கமுடியாது. தன் பாதுகாப்புக்கு ஓர் வல்லரசின் ஒத்துழைப்பையும உதவியையும் நிச்சயமாகவே நாடியிருக்கவேண்டும். 150 வருடங்களுக்குமேல் இலங்கையுடன் தொடர்புகொண்டுள்ளது இங்கிலாந்து; அது தன் பரிபாலனகாலத்தில் அநேக பிழைகளை இங்கே இழைத்திருக்கலாம் ஆனுல் அந்த ஆட்சிப் பிழைகளின் பொருட்டு, இனியும அதன் ஒத்துழைப்பையும உதவியையும் சுதந்திர இலங்கை நாடாமலிருக்கவேண்டுமா? ஆனுல், இலங்கையில் பிரிட்டிஷ் ராணுவம் இருப்பதற்கு ஓர் காலவரையை நிர்ணயித்திருந்தால், உசிதமாயிருந்திருக்கும் என்பதே எமது அபிப்பிராயம; அப்படி நிர்ணயம் செய்யாமல் விட்டமை பின்னுக்கு அவசியமற்ற பிண விரா-

தங்களுக்கும் அபிப்பிராயபேதங்களுக்கும் பிணக்குக்கும் ஏதுவாக வரலாம்.

வெளிநாட்டு வியவகாரம் இராணுவப்பாதுகாப்பு என்னும் இரண்டு விஷயங்கள் சம்பந்தமாக ஏற்பட்டுள்ள உடன்படிக்கை விதிகள் பற்றி அபிப்பிராயபேதம் இருக்கின்றதேயொழிய, உள்நாட்டு நிருவாகத்தில், இலங்கைக்குப் பூரணசுயாாச்சியம் உண்டு என்பதை ஆட்சேபிப்பவர் எவருமிலர். இது மிகவும் பிரதானம். இலங்கையின் பொருளாதார நிலைமையைச் சீர்திருத்தி அமைத்து நாட்டுமக்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்ய இலங்கை மக்களுக்கு இப்போது பூரண சுதந்திரமளிக்கப்பட்டுள்ளது. நாட்டின் கைத்தொழில்களை விருத்தி செய்ய விவசாயத்தை முன்னேற்ற, மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த அளிக்கப்பட்டுள்ள இச்சந்தர்ப்பத்தை இலங்கை ஜனத் தலைவர்கள் கைவிடமாட்டார்களென்பதே எமது அபிப்பிராயம். சுயராச்சியம் என்பது ஒருசிலர் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகித்து நீண்ட பிரசங்கங்கள் செய்வதற்காகஏற்பட்டசாதனமல்ல.மக்களின்வாழ்க்கைக்குத் தக்கவாறு சுயராச்சியத்தைப் பயன்படுத்தி,இன்று நாட்டில் தாண்டவமாடும் பசி, பட்டினி, பஞ்சம், வறுமை, தொழிலின்மை என்பனவற்றைப் போக்க முயற்சிப்பது ஜனத்தலைவர்களது கடமையாகும்.

சுதந்திர மசோதா விஷயத்தில் தமிழ்மக்களுடைய நிலைமை என்ன? ரூஷியாவின பல்லவிக்குத் தாளம் போட்டு சம்மட்டி சத்தகக் கொடி ஏந்தி, எங்கள் நாகரீகம், கலை, ஆசாராநுட்டானம் என்பவற்றுக்கு விரோதமான கொள்கையுடைய சமதர்மிகள், சமசமாஜிகள் என்பவர்களுடன் ஒத்துழைத்து இச்சுதந்திர மசோதாவை நிராகரிக்க முயற்சிப்பதா, அன்றி என்பதைத் தமிழ் ஜனத்தலைவர்கள் இச் சந்தர்ப்பத்தில் ஆர அமர ஆலோசித்து ஓர் முடிவுக்கு வருதல் வேண்டும். நாமோ சிறுபான்மையினர்: எமது எதிர்கால சுபீட்சம் எம் தலைவர்களின் வருங்கால நடத்தையைப் பொறுத்திருக்கிறது.

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் ஆதரவில், நிகழும் கார்த்திகை மாசம் 6.ந் திகதி (21-11.47) வெள்ளிக்கிழமை மாலை 6½மணிதொடக்கம், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித்தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் தண்டமிழ்ச் செஞ்சொற் செல்வரும், முத்தமிழ்ப் புலவருமாகிய விருதை திரு. ச. கண்ணனடிகள் 'தமிழ் இனிப்பதேன்? இலக்கியம் பேரின்பந் தருவதேன்" என்னும் பொருள்பற்றி ஓர் ஆராய்ச்சி இன்னிசைச் சொற்பொழிவு நிகழ்த்துவாரென மேற்படிசபைக் கௌரவ காரியதரிசி தெரிவிக்கின்றார்.

## பெற்ரோல் கட்டுப்பாடு

இலங்கையில் இப்போது பெற்ரோல் எண்ணெய் போதிய அளவு உண்டு. ஆகவே அடுத்த ஆண்டில், அதன்மீதுள்ள கட்டுப்பாட்டைத் தவிர்த்துவிட அரசாங்கம் ஆலோசித்திருக்கிறது. ஆனல் திடீரெனக் கட்டுப்பாட்டைத் தவிர்ப்பது அரசாங்கத்துக்கு விருப்பமில்லை. வருகிற ஆண்டு ஜனவரியிலும் பிப்ரவரியிலும் கட்டுப்பாட்டைத் தவிர்த்துப் பார்த்து, அதனுல் நிலைமை சீர்குலையாமல் இருக்குமானுல், அதனை முற்ருக அரசாங்கம் நீக்கிவிடுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டக் கரிமணியில்லை; பெயர் முத்துமாலை

## சுயராச்சியமா? கண்கட்டுவித்தையா?

### மலை வயிறு நொந்து சுண்டெலியை ஈன்றது

[நமது அரசியல் நிருபர் எழுதுகிறர்]

இலங்கைப்பிரதமர் மிஸ்ரர்டி.எஸ்.சேனநாயக்கா இப்போதுசிலகாலமாக, இதோ சுயராச்சியம் எங்கள் வாசற்படி யண்டை வந்துவிட்டது; அதனை அணைத்துப் பிடிக்க வேண்டியதுதான் தாமதம் என்றெல்லாம் பரக்கப் பேசிவந்தார் அவருடைய வாரிசு (அவருக்குப்பின் இலங்கைப் பிரதமராக வர இப்போது கருமம் ஆற்றும்)மிஸ்ரர் பண்டாரநாயக்கா, சமீபகாலத்தில இந்தயாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோது இலங்கைக்குச் சுயராச்சியம் வந்துவிடப்போகிறது அதுசம்பந்தமான உடன்படிக்கைகள் வெளியான பின், அவர்றைக் குறைகூறும் எவனும் இலங்கையில் இருக்கமாட்டான் என்று வானளாவப் புகழ்ந்தார். பிரிட்டிஷ் அதிகார வர்க்கமும் சேனநாயக்காக் கோஷ்டியும் இதுவரை மறைமூகமாய்ச் செய்து வந்த விஷயங்கள் யாவும் இப்போது அம்பலத்துக்கு வந்துவிட்டன. இலங்கைக்குச் சுயராச்சியம் வழங்கும் மசோதா ஒன்று சென்ற வியாழக்கிழமை பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் முதலாம் முறையாக எடுத்தாளப்பட்டது. அது வருகிற வியாழக்கிழமை இரண்டாம் முறையாக எடுத்தாண்டு நிறைவேற்றப்படும்.

கட்டக் கரிமணியில்லை. ஆனல் பெயர் முத்துமாலை அதேபோலத்தான் இந்தச் சுதந்திர மசோதா இந்த மசோதாப்பிரகாரம் இலங்கை உண்மையான பரிபூரண சுயாச்சியத்தை அடையப் போவதில்லை என்பது இந்த மசோதாவின் முன்னுரையிலிருந்தே தெரியக்கிடக்கின்றது இந்தியாவுக்குச் சுயராச்சியம் நல்கும் மசோதாவில், "இந்தியாவிலே இரண்டு சுதந்திர டொமினியன்களை ஆக்கி அவற்றுக்குப் பூரணசுதந்திரம்நல்குவதேஇந்தமசோதாவினநோக்கம்" என்று பட்டவாத்தனமாகத் தெள்ளத்தெளியக் கூறப்பட்டது, ஆனல் இலங்கைச் சுதந்திர மசோதாவில், "பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இலங்கைக்குப் பூரண பொறுப்பாட்சி நல்குவது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது இதன் அர்த்தம் என்ன? அதிகிடக்க.

இந்தச் சுதந்திர மசோதாவைப் பிரிட்டிஷ் அரசாங்கம் தனது பாராளுமன்றத்தில் எடுத்தாளமுன், பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் இலங்கை யரசாங்கத்துக்குமிடையே சில விஷயங்கள்பற்றி ஓர் உடன்படிக்கையும் ஏற்பட்டிருக்கிறது. அவ்விஷயங்களாவன:

வெளிநாட்டு வியவகாரம்.
ராணுவம்—பாதுகாப்பு.
அரசாங்க உத்தியோகத்தர்.

### வெளிநாட்டு வியவகாரம்


இதுசம்பந்தமாக பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் இலங்கை யரசாங்கத்துக்கும் ஏற்பட்டுள்ள உடன்படிக்கைச்சாரமாவது:

(1) இதற்குமுன் கூடிய ஏகாதிபத்திய மகாநாடுகளில நிறைவேறிக் கைக்கொள்ளப்பட்ட தீர்மானங்களை இலங்கை இனியும் தொடர்ந்து கைக்கொள்ளும் என்று உடன்படுகிறது.

(2) இலங்கையின் சார்பாக, இங்கிலாந்திலே ஓர் பிரதிநிதியும், இங்கிலாந்தின் சார்பாக இலங்கையிலே ஓர் பிரதிநிதியும் இருப்பர்.

(3) வெளிநாட்டு வியவகாரம் பொதுவாகச் சம்பந்தப்பட்டமட்டில் மற்றும் டொமினியன்கள் விஷயத்தில் என்ன முறையை இங்கிலாந்து கைக்கொள்ளுகிறதோ, அதே முறையை இலங்கை விஷயத்திலும் கைக்கொள்ளும்.

(4) இலங்கை அந்நிய நாடுகளுடன் இராஜரீகத் தொடர்பு வைத்துக்கொள்ள விரும்பி பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு அறிவித்தால், அந்தவிருப்பத்தை இங்கிலாந்து குறித்த அந்த அந்நிய நாடுகளுக்குத் தெரிவிக்கும். ஓர் அந்நிய நாட்டிலே இலங்கையின் பிரதிநிதி இல்லையானல் அப்படிப்பிரதிநிதியாகக் கடமைபார்க்கும்படி இலங்கையின் அனுமதியுடனும் சம்மதத்துடனும் தன் பிரதிநிதிக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் கட்டளையிடும்.



"சுயராச்சியம்" பெற்றுவிட்டார்!

(5) ஐக்கியதேச ஸ்தாபனத்தில் அல்லது வேறெந்தச் சர்வதேச ஸ்தாபனத்திலாவது இலங்கை அங்கத்தவம் வகிக்க விரும்பினல், அந்த விருப்பத்தைப் பூர்த்தியாக்குவதில் இங்கிலாந்து தன் பூரண உதவியை அளிக்கும்.

### இராணுவப் பாதுகாப்பு

இதுபற்றிய உடன்படிக்கை விதிகளின் சாரம் வருமாறு:

(1) அந்நியர் ஆக்கிரமிப்பிலிருந்து பரஸ்பரம் பாதுகாத்துக்கொள்ளவும், போக்குவரத்துச் சாதனங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் இங்கிலாந்தும் இலங்கையும் பரஸ்பரம் உதவிபுரியும் இந்த நோக்கத்தைப் பூர்த்தி செய்தற்காக, இரண்டுபகுதியினரும் ஒத்துக்கொண்ட பிரகாரம் இலங்கையில் வேண்டிய இடங்களில், பிரிட்டிஷ் கடற்படைத் தளங்களையும், விமானப்படைத் தளங்களையும் அமைத்துப் பாதுகாக்கவும். வேண்டிய தரைப்படைகளை வைத்திருக்கவும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு இலங்கையரசாங்கம் ஒத்துக் கொடுக்கின்றது.

(2) மேலே சொல்லிய விஷயத்துக்கு ஆகவேண்டிய சகல சௌகரியங்களையும் செய்துகொடுக்க இலங்கையரசாங்கம் சம்மதம் அளிக்கிறது. இந்தச் சௌகரியங்களுட் சில பின்வருமாறு:

இலங்கையில் உள்ள ஆகாய விமான. கடற்படைத் தளங்களைப் பிரிட்டிஷ் அரசாங்கம் உபயோகித்தல், துறைமுகங்கள் ராணுவ நிலையங்களை உபயோகித்தல் தபால், தந்தி, முதலாம் செய்தியனுப்பும் வசதிகளைப் பயன்படுத்தல், ராணுவத்தைச் சேர்ந்த பிரிட்டிஷ் வீரர்கள் குற்றமிழைத்தால இப்போது இருப்பதுபோல, இராணுவ நீதிஸ்தலத்தால் விசாரணை செய்யப்பட வசதியளித்தல்.

(3 இலங்கையில்உள்ளவர்களுக்கு இராணுவப் பயிற்சியளிப்பதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் போதிய உதவி செய்யும்.

(4) இரண்டு அரசாங்கங்களும் பூரண ஒற்றுமைகொண்டு தம் பாதுகாப்புக்கு வேண்டியனவற்றைச் செய்வதற்கு வேண்டிய ஓர் ஸ்தாபனத்தை அமைக்கும்.

மூன்றாவது உடன்படிக்கை அரசாங்க உத்தியோகத்தர் சம்பந்தமானது. அதாவது பிரிட்டிஷ் குடியேற்றநாட்டுமந்திரியால் நியமிக்கப்பட்டுவந்த ஸிவில் சேர்விஸ் உத்தியோகத்தரை, இலங்கையரசாங்கம் அவர்களின்சம்பளத்தைக் குறைத்தோ அல்லது அந்தஸ்தைக் குறைத்தோ இருக்காமல் செய்வதற்கு அவர்களின் பாதுகாப்பிற்காக இந்த உடன்படிக்கை இயற்றப்பட்டது. இந்த உடன்படிக்கை நிபந்தனை இனி உத்தியோகத்தி லமருவோருக்குச் செல்லுபடியாகமாட்டாது.

### சேர் ஒலிவரின் வியாக்கியானம்

மேலே காட்டிய நிபந்தனைகள், உடன்படிக்கைகள்பற்றி, சேர் ஒலிவர் குணத்திலகா, சேனநாயக்கா அரசாங்கத்தின் சார்பாக, பத்திரிகை நிருபர்களை அழைத்து ஓர் வியாக்கியானம் விடுத்திருக்கிறர்:

இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து என்று வெளிப்படையாகக் கூருவிட்டாலும், அந்த டொமினியன் அந்தஸதைத்தான் நாம் இப்போது பெறப்போகிறோம். என்று சேர். ஒலிவர் கூறினர். இப்போது வழங்கப்படவிருக்கும் திட்டத்தின்படி, ஏற்கெனவே நிறைவேறியுள்ள உடன்படிக்கைகள் முழுவதையும் அல்லது அவற்றில் சிலவற்றை மாற்றவோ, நீக்கவோ, நிராகரிக்கவோ, இலங்கைக்கு எந்தநேரமும் பூரண உரிமை உண்டு. அதனை நாளைக்கே செய்ய எமக்கு அதிகாரம் இருக்கிறது. அதுமாத்திரமல்ல, நாம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலிருந்து விலகவும் எமக்குஉரிமையிருக்கிறது.



வியாக்கியானம் செய்கிறர்

என்று சேர். ஒலிவர் குணத்திலகா கூறினர். அவர் மேலும் கூறியதாவது:

"ராணுவப் பாதுகாப்பு விஷயமாக நாம் செய்துகொண்டுள்ள உடன்படிக்கையைச் சிலர் தப்பர்த்தம் செய்துகொண்டு விட்டனர். இந்தியாவுக்கு விரோதமான ஓர் உடன்படிக்கை அது என்றும் சிலர் கூறுகின்றனர். ஆனல் அது அப்படியல்ல. நாம், இதேபோன்ற ஓர் உடன்படிக்கையை இந்தியாவுடனும் செய்யலாம்.

"இன்று பிரசுரிக்கப்பட்ட இந்த உடன்படிக்கைகளைவிட வேறும் உடன்படிக்கைகள் இலங்கைக்கும் இங்கிலாந்துக்கும் இடையே இரகசியமாக ஏற்பட்டிருக்கலாம் என்றும் சிலர் கூறுகின்றனர், அப்படிக் கூறுவது சரியல்ல. நாம் இன்று வெளியிட்டிருப்பதுதான் முழுவதும். இவற்றைவிட வேறெவ்வித உடன்படிக்கையும் இரகசியமாகச் செய்யப்படவில்லை."

இலங்கைப் பாராளுமன்றம் கூடியதும் முதல்விஷயமாக, இந்த உடன்படிக்கை விதிகள் எடுத்தாளப்படும். இந்த உடன்படிக்கைகளை அங்கீகரிக்கும்படி பிரதமர் மிஸ்ரர் டி எஸ். சேனநாயக்கா ஓர் பிரேரணையை எடுத்தாள்வார், செனேற்சபையிலும், அதேபோன்ற ஓர் பிரேரணையை சேர் ஒலிவர் குணத்திலக எடுத்தாள்வார்,

தொடர்ச்சி 4-ம் பக்கம்

### நவம்பர் 25

இந்த நவம்பர் மாதம் 25ந் திகதி பாராளுமன்றம் கூடும். பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையே இலங்கையின் "சுயராச்சியம்" சம்பந்தமாக ஏற்பட்டுள்ள உடன்படிக்கைகள் அன்று விவாதிக்கப்படும்.

இந்திய அரசியல்

## சர்தார்படேல் முழக்கம்

### ஹைதராபாத்தில் நிஸாம் நடுக்கம்

ஜூனகாத் சமஸ்தானம் இந்தியச்சமஷ்டியில இன்னும் சேரவில்லை என்று ஷை சமஸ்தானப் பிரதமர் கூறுகிறர் அவர் எப்படிக் கூறியும், அச் சமஸ்தான மக்கள் இந்தியாவுடன் சேருவதைப் பூரணமாக மனப்பூர்வமாக ஆதரிக்கிறர்கள். சென்ற வாரம் இந்திய அரசாங்கத்தின் உபவிப் பிரதமர் சர்தார் வல்லபாய் படேல், அங்கே சென்றிருந்தார். அவரை வரவேற்பதற்கு, சமஸ்தான மக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு தாம் இந்தியாவுடன் சேரப் போவதாக ஆர்ப்பரித்தனர் அப்போது சர்தார் படேல் இந்திய அரசாங்கத்தின் கொள்கையைப்பற்றி ஓர் பிரசங்கஞ் செய்தார்; ஜூனகாத் சம்பவம் மற்றும் சமஸ்தானதிபதிகளுக்கும் ஓர் பாடமாயிருக்கும் எனத் தாம நம்புவதாக சர்தார் குறிப்பிட்டு மேலும் பேசியதாவது:

"இவ்விஷயத்தில் ஹைதராபாத் நிசாம் மன்னர்க்கு ஓர் எச்சரிக்கைவிடுக்க விரும்புகிறேன். அங்கேயுள்ள இத்தஹாதுல் முஸ்லிமின் என்னும் முஸ்லீம் சங்கம், நிசாம் மன்னரைப் பிழையான வழியில் இழுத்துச் செல்லுகிறது. ஜூனகாத் பிரதமர், அந்தச் சமஸ்தான நவாப்பைப் பிழையான வழியிற் செலுத்தி அல்லலுறச் செய்தாங்கு. [illegible] ஹைதரா[illegible] ஹைதராபாத் இந்தியாவின் வயிற்றுக்குச் சமானம், உடலில் இருந்து வயிறு துண்டிக்கப்பட்டால், அது எவ்வாறு பிழைக்கமுடியும்? மசூலிப்பட்டணம் அல்லது கோவையை விலைகொடுத்து வாங்கி அவற்றை ஓர் துறைமுகமாக்க நிசாம்மன்னர் முயற்சிப்பதாகவும் அறிகிறோம் ஆனல் தாம் நினைத்தபடி வாங்கவும் விற்கவும் இத்துறைமுகங்கள் நிசாமின் முது[illegible]து ஸ்ரீதனம் அல்லஎன்பதை அவர் உணர்ந்துகொள்ளுதல் வேண்டும்.



தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆூ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பண ரூபா

**134,3670**

**100** ரூபா விகிதமான **8000** பங்குகள்

**பங்குப்பணங் கட்டுமுறை.**

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும். வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

**கடன்.**

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-47 (தி)

## சர்தார்படேல் முழக்கம்

3ம் பக்கத் தொடர்ச்சி

"ஹைதரபாத் உஜ்ஜீவிக்க வேண்டுமானல், நிசாம்மன்னர் தம் நடைவடிக்கைகளை மாற்றிக்கொள்ளவேண்டும். பொது ஜன அபிப்பிராயத்துக் கிணங்க அம்மன்னர் நடந்துகொள்ளவேண்டும். அல்லது பிரஜைகளின் விருப்பத்துக்கு மாறாக நடந்து கொடுங்கோலாட்சி புரிந்த மன்னர்கள் அடைந்த கதியையே அவரும் நிச்சயமாக அடைவர்"

ஜூனகாத் விஷயமாக சர்தார் படேல் பின்வருமாறு தெரிவித்தார்.

"ஜூனகாத் விஷயத்தில் பிரவேசிப்ப உரிமையுமில்லை.

தற்குப் பாகிஸ்தானுக்கு எந்தவிதமான

"இந்தியாவின் எல்லைப்புறத்திலே பாகிஸ்தான் இப்படியான சேட்டைகள் புரிந்துவருமானல், இந்திய அரசாங்கம் சும்மாவிருக்கமாட்டாது என்பதைப் பாகிஸ்தானுக்கு இப்போது பட்டவர்த்தனமாகத் தெரிவித்து எச்சரிக்கைசெய்ய விரும்புகிறேன். இந்திய அரசாங்கத்திற்குக் "கரைச்சல்" கொடுக்கவே, பாகிஸ்தான் ஜூனகாத் விஷயத்திற் பிரவேசித்தது. இந்தச் சூழ்ச்சி எல்லாம் இனிப் பலிக்கமாட்டா. ஏதோ அதிகம் செய்யப் போவதாகப் பாகிஸ்தான்வெருட்டுகிறது. அதற்கெல்லாம் இந்தியா பரிபூரணமான ஆயத்தம். பாகிஸ்தான் மாத்திரமல்ல, வேறெந்த அந்நிய அரசாங்கமாவது எங்கள் விஷயத்திற் பிரவேசிக்குமேயானல், அவற்றுக்குச் சூடுகொடுக்க, பாரதமக்கள் தயார் என்பதை ஒளிப்பு மறைப்பின்றிக் கூற விரும்புகிறேன்."

### முஸ்லீம் லீக்குப் புத்திமதி

இந்தியாவில் வசிக்கும் முஸ்லீம்கள் இனித் தம் கருமத்தை எவ்வாறு ஆற்ற வேண்டும் என்பதைப்பற்றி ஆலோசிப்பதற்குச் சில பிரபல முஸ்லீம் தலைவர்களைக் கொண்ட மகாநாடு ஒன்றை, இந்தியாவின் கல்வி மந்திரி மௌலானா அபுல்கலாம் அஸாத் சென்ற சனிக்கிழமை புதுடெல்கியிற கூட்டினர். முஸ்லிம்லீக் போன்ற வகுப்புவாதஸ்தாபனங்கள் நாட்டுக்கு விளைத்த கெடுதிகளை மௌலானா அஸாத் விளக்கி, இனியும் முஸ்லீம்கள் முஸ்லிம் லீக்கைக் கட்டிப்பிடித்திருக்க வொண்ணது. அந்த ஸ்தாபனத்தைக் கலைத்துவிட்டு முஸலிம்கள் அனைவரும் இந்தியத் தேசீயக் காங்கிரசிற் சேர்ந்து அதனைப் பலப்படுத்தல் வேண்டும் என்று தம் தலைமைப் பிரசாரணத்திற் குறிப்பிட்டார். மகாநாட்டு முடிவில், இந்தியாவில் வசிக்கும் முஸ்லீம்கள், இந்தியாவிடம் விசுவாசத்துடனும் பக்தியுடனும் நடந்து அதன் சிறப்புக்காகப் பாடுபடவேண்டுமென்று ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இம் மகாநாட்டிற்கு, முஸ்லிம்லீக்கின் பிரமுகர்களில் ஒருவராயிருந்த நவாப் மகமத் இஸ்மெயில்கான் உட்படப் பல லீக்கர்கள் சமுகமளித்தனர்.

மதிப்புரை

## சித்தாந்தத் திரயம்

தருமபுர ஆதீனவெளியீடு

எண் ௪௦௬ மாயூரம் P O தென்னிந்தியா
இருபா இருபஃது
தருமபுர ஆதீன வெளியீடு எண் ௧௩௯

உமாபதி சிவாசாரியார் அருளிச்செய்த வினாவெண்பா, கொடிக்கவி, உண்மைநெறிவிளக்கமாகிய மூன்று நூல்களும் சித்தாந்த திரயம் என்னும் பெயரோடு, திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீனநூலே, ஒரே புத்தகமாக வெளியிடப்பட்டன. இருபா இருபஃது அருணந்தி சிவாசாரியரால் அருளிச் செய்யப்பட்டது

இந்நூல்கள் நான்கும் பதவுரையும் ஆங்கில மொழிபெயர்ப்பும் விசேட வுரையும் பொருந்தியவை. ஆதலால் இவை தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளையும் கற்றோர்க்குமேயன்றித் தனித்தமிழ் கற்றோர்க்கும் தனி இங்கிலீஷ் கற்றோர்க்கும் பயன்படத்தக்கவை.

இவற்றுள், வினாவெண்பாவிலே உமாபதிசிவம் தனது குருவாகிய மறைஞானசம்பந்த சுவாமியைச் சிவபிரானகப் பாவித்து, அவரை விளித்துச் சைவ வாய்மைகளைக்கூறி அவற்றில் எழும் வினாக்களை எடுத்தோதுகின்றார்.

கொடிக்கவியிலே ஆலயத்தில் கொடியேற்றுதல் ஆன்மாவானது பிறவியெடுத்துத் சிவபிரானது திருவருளைப் பெற்று முத்திபெறும்பொருட்டு என்பது விளக்கப்படுகின்றது. இறுதிக் கவியிலே ஆன்மாவின் மோட்ச மார்க்கம் திருவைந்தெழுத்தின் படிமுறைவால் விளக்கப்படுகின்றது

உண்மைநெறிவிளக்கம்: ஆன்மாவானது மலங்களினின்றும் நீங்கித் தன்னையறிந்து சிவபோகத்தைப் பெறும் மார்க்கம் பத்துப்படிகளாக வகுத்துக் கூறப்படுகின்றது. இப்படிகள் பத்தும் தசகாரியமெனப்படும். இவை பொருள் விளக்கத்துக்காகத் தத்துவரூபதர்சனசுத்தி, ஆத்மரூபதர்சனசுத்தி, சிவரூபதர்சனயோக போகம் எனவகுக்கப்பட்டவையாயினும், அநுபவத்தில் இம்முறையே வருவன வல்ல.

இருபாஇருபஃது அருணந்தி சிவம் தமது குருவாகிய மெய்கண்டதேவரை விளித்துக் கூறுவது; வினா வெண்பாவைப்போன்றது. வெண்பா அகவற்பா ஆகிய இருவகைப் பாக்கள் இருபதைக் கொண்டமையால் இந்நூற்கு இப்பெயராயது;

இவற்றிலே விலைகள் குறிக்கப்படாமையால, இவைகள் இலவசமாகக் கொடுக்கப்படுகின்றனபோலும் இந் நூல்களையும் இவைபோன்ற நூற்றுக்கு மேற்பட்ட நூல்களையும் வெளியிட்டுச்சைவவாய்மைகளைப் பரவச்செய்யும் தருமபுர ஆதீனத்தின் சிவபுண்ணிய சீலம் ஏனைய ஆதீனங்களுக்கும் வாய்க்குமாயின், சைவ சமயம் ஓங்கி வளர்ந்து சிறக்குமென்பதற்கைய மில்லை.

சு, சி.

## வகுப்புவாதம் ஒழியும்

1—ம் பக்கத் தொடர்ச்சி

ப்புவாதம் வேரோடு களைந்து எறியப்படவேண்டும்.

எந்த விஷயத்தையும் சாதிப்பதற்குச் சாதனங்கள் பலவுண்டு. அப்படியே வகுப்புவாத அரக்கனைப் பூண்டறுக்க, வழிகளும் பலவுண்டு. குறிப்பாக அவற்றுள்ளே இருவகையைக் கூறலாம். ஒன்று, சட்டரீதியாகப் பலாத்காரத்தைப் பிரயோகித்து வகுப்புவாதத்தை ஒடுக்க முயல்வது. மற்றொன்று அகிம்சை முறையில் சந்தேகத்தையும், பகைமை உணர்ச்சியையும் போக்கி, உண்மையை உணர்த்தி இதய ஒருமைப்பாடு ஏற்படுத்துவதன் மூலம் வகுப்புவாதத்தை ஒழித்தல்.

இவ்விரண்டிலும் பலாத்காரத்தின் மூலமாகச் செய்யப்படும் முயற்சியால், வகுப்புவாதத்தை ஓரளவு அடக்கி வைத்திருக்கலாமேயன்றி முற்றிலும் ஒழித்துவிடுவது என்பது முடியாதகாரியம். ஆனல் அஹிம்சையின் மூலம் செய்யப்படும் முயற்சி பலன் தருவதிலே காலதாமதம் ஆனுலும், சாஸ்வதமான பலனை நிச்சயம் தரும். அதிகாரத்தாலும், சட்டத்தாலும் பலாத்காரத்தாலும் செய்யமுடியாத எத்தனையோ காரியங்கள் அன்பாலும் தர்ம உணர்ச்சியாலும், அஹிம்சையாலும் சாதிக்கப்பெற்றிருப்பதை நாம் நன்கு அறிவோம். இல்லாவிட்டால் நெப்போலியன் தன் ராஜ்யம் சின்னபின்னம் அடையும் பொழுது 'ஐயோ, எவ்வளவோ சிரமத்துடன், எண்ணற்ற படைபலத்தால், நான் ஸ்தாபித்த இந்த ராஜ்யம் இவ்வளவு சீக்கிரத்திலே தகர்ந்துவிட்டது. ஆனல் அன்பினலேகிறிஸ்து பெருமான் ஸ்தாபித்த ராஜ்யம் எவ்வளவோ நாட்களுக்குப் பிறகும் வளர்ந்துகொண்டே இருக்கிறது. என்ன வேண்டியிருக்கிறது இந்த ராணுவ மேதை' என்றெல்லாம் கதறுவானு?

அஹிம்சை என்பது, கையாலாகாதவனின் ஆயுதம் என்று எண்ணுவது வடிகட்டிய அறியாமையே ஆகும். பலாத்காரத்துக்கு உடல் பலம் மட்டும் இருந்தால்போதும். ஆனல் அஹிம்சைக்கோ மனேபலமும் வேண்டும். ஆகவே, அஹிம்சை கோழைகளின் ஆயுதம் அல்ல என்பதும், வீரர்களின் ஆயுதமே என்பதும் தெளிவகப் புலப்படும். அஹிம்சை என்பது வெறும் தார்மீக உணர்ச்சியேயன்றி காரிய சித்திக்கான-சரித்திரங்கண்ட முறையல்ல என்று, ஒரு சாரார் வாதிக்கக்கூடும். அப்படிச் சொல்லுவது அவ்வளவு உண்மையல்ல. சரித்திரம், நடந்தவற்றை எடுத்துக்காட்டி நம்மை எல்லாம் அஹிம்ஸை நெறிக்கே இட்டுச் செல்லுகிறது என்பதுதான் நாம் காணும் முடிவு.

## ஆர்ப்பிரசாரம்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

அழிந்துவிடும் என்ற துண்டுப்பத்திரங்கள் லட்சக்கணக்கில் அரேபிய முஸ்லீம் நாடுகளில் விநியோகிக்கப்படுகின்றன.

"பாஞ்சாலத்தில் நிகழ்ந்த கலகங்களில் முஸ்லீம்கள் எப்படிக் கொலை செய்யப்பட்டார்கள் என்பதைச்சினிமாப் படங்கள் மூலமாகவும்காட்டப்படுகிறது இவற்றையெல்லாம் காட்டுவது பிரிட்டிஷ் பட முதலாளிகள்

"இவ்வளவில் மாத்திரம் பிரிட்டிஷர் நிற்கவில்லை. இங்கிலாந்திலே கன்ஸர்வேற்றிவ் கட்சிப் பத்திரிகையான "டெயிலி கிராபிக்" இந்தியாவை பிரிட்டிஷார் மீண்டும் கைப்பற்றினல்தான் ஹிந்து—முஸ்லீம் கலகம் நின்றுவிடும் என்றும் ஆலோசனை கூறியிருக்கிறது. பிரிட்டிஷார் இந்த விஷயத்திற் பாராமுகமாயிருந்தால், ருஷியர் அப்படிப்பாராமுகமாவிருக்கவில்லை என்பதை எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம். இந்தியாவிற்குட் படையெடுத்து, அங்கே அமைதியை நிலைநாட்ட ருஷியா ஆயத்தமாகவிருக்கிறது என்று அப்பத்திரிகை கூறுகிறது.

"பிரிட்டிஷ் - அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் இந்தியாவை மூன்றும் உலகயுத்தத்துக் கேதுவாக வைத்திருக்கச் சூழ்ச்சிசெய்கிறார்கள் என்றே சந்தேகிக்கவேண்டியிருக்கிறது."

## திரும்பிவிட்டார்

புதுடெல்கியில் நிகழ்ந்த ஆசியத் தொழிலாளர் மகாநாட்டிற் பங்குபற்றச் சென்ற இலங்கை இந்தியப் பிரதிநிதி ஸ்ரீ ஜூனத் வி. வி. கிரி சென்ற வாரம் கொழும்புக்கு மீண்டுவிட்டார்.

## கட்டக்கரிமணியில்லை; பெயா முத்துமாலை

3-ம் பக்கத் தொடர்ச்சி

பாராளுமன்றத்திலே, மிஸ்ரர் சேனநாயக்காவின் பிரரேணை தோல்வியடைந்தால், சேனநாயக்காவின் மந்திரசபை உடனே பதவியைவிட்டு நீங்கிவிடும். அதன்பின் மற்றும் கட்சிகளைக்கொண்ட ஓர் அரசாங்கம் அமைக்கப்படவேண்டும் அல்லது பாராளுமன்றமே கலைக்கப்பட்டு, ஓர் பொதுத்தேர்தல் புதிதாக நடத்தல் வேண்டும்.

மிஸ்ரர் சேனநாயக்காவின் பிரரேணை தோற்குமானல், பாராளுமன்றத்தைக் கலைக்கும்படி, மிஸ்ரர் சேனநாயக்கா கட்டாயம் தேசாதிபதிக்கு ஆலோசனை கூறுவார். அந்த ஆலோசனையைத் தேசாதிபதி ஏற்றுப் பாராளுமன்றத்தைக் கலைப்பதை, எத்தனை பாராளுமன்றப் பிரதிநிதிகள் விரும்புவர்? முந்திய தேர்தலிற்பட்ட கஷ்டங்கள் நீங்குமுன், இன்னோர் தேர்தலில் ஈடுபடுவதென்றுல் லேசான கருமமல்ல. சூடுகண்ட பூனை அடுப்பண்டை நாடலாம்: ஆனல் எம் பாராளுமன்றப் பிரதிநிதிகளிற் பலர் இனியும் வாக்காளரை நாடுவது துர்லபம். ஆகவே பிச்சைவேண்டாம் நாயைப்பிடி என்றவன் நிலமாக, சுயராச்சியமாவது சுணங்கியாவது என்று இவர்கள் கருதி ஓர் குட்டிக்கரணம் போட்டு மிஸ்ரர் சேனநாயக்காவின் தீர்மானத்துக்குச் சாதகமாகவே ஈற்றில் வாக்களிப்பதுதான் நடக்கப்போகும் கருமம். "பொதுத்தேர்தல்" என்ற ஓர் சவுக்கை வைத்துக்கொண்டு "சர்க்கஸ் வீரன்" சேனநாயக்கா, சிங்கம் புலிகளை வெருட்டி அடக்குவார் என்பது நிச்சயம். ஆனல், அப்படியடக்கி ஒடுக்க முன், கனைப்புக்களும், மிரட்டல்களும் தாராளமாகப் பாராளுமன்றத்திற் கேட்கும்.

## விற்பனவு விளம்பரம்

வடமாகாணத்திலிருக்கும் உணவுப் பொருட்சாலைகளில் (Supp'y Station) இழிந்து பாவிக்கமுடியாத மூன்றுவது வகுப்பு (C Grade) சாக்குகள் விற்கப்படும். அவற்றை விலைக்கு எடுக்க விரும்புவோர் யாழ்ப்பாணம் உப உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரி அவர்கட்கு விண்ணப்பித்து அவர்கள் கொடுக்கும் விண்ணப்பப் பத்திரத்தில் உங்கள் மதிப்பு விலையைப் போட்டு 1947-ம் ஆூ மார்கழி மீ 2ந் உ செவ்வாய்க்கிழமை மத்தியானம் 12 மணிக்கு முன் கொடுக்கவேண்டும்.

கச்சேரி — இ. சிந்தாமணி
யாழ்ப்பாணம் — உபஉணவுக்கட்டுப்பாட்டு
14-11-47 — அதிகாரி

G 118 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கும் இங்கும்

பிரிட்டிஷ் நிதிமந்திரியான டக்ரர் ஹியூ டால்ற்றன் தம் பதவியிலிருந்து விலகிவிட்டார். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வரவுசெலவுத் திட்டம், பாராளுமன்றத்தில் பகிரங்கமாவதற்குமுன், அவர் அத்திட்டத்தின் சில அம்சங்களை ஓர் பத்திரிகை நிருபர்க்கு அறிவித்துவிட்டார். அவர், இதனை வேண்டுமென்று, தீமைவிளைக்கவேண்டுமென்று அல்லது சுயநலம் கருதிச் செய்யவில்லை. ஆனால் அரசாங்கம் சம்பந்தமான ஓர் இரகசியத்தைப் பரகசியமாக்கிவிட்ட தம குற்றத்தை ஒப்புக்கொண்டு தம் பதவியைவிட்டு விலகிவிட்டார்.

இது இங்கிலாந்தில் நிகழ்வது. ஆனால் எங்கள் இலங்கையில் நிகழ்வது என்ன? அதிகாரபதவியிலிருப்பவர்கள், லஞ்சம் முதலாம் துர்ப்பழக்கங்களுக்கு ஆளாகியுள்ளனர் என்ற குற்றம் பகிரங்கமாகச் சாட்டப்படுகிறது. ஆனால் அவர்களில் எவராவது இப்படியாகச் சுயநலத்தியாகம் செய்துள்ளனரா? காரணம், இங்கே பொதுஜன அபிப்பிராயம், இங்கிலாந்து முதலாம் நாடுகளில் உள்ளதுபோல அவ்வளவாக உருவாகவில்லை. இங்கே அரசியல் சம்பந்தமான துர்ப்பழக்கங்களைக் கைக்கொள்ளுவோர்க்கு கண்டனத்துக்குப் பதிலாக விசேஷ மரியாதை காட்டப்படுகிறது. இப்படியான மனப்பான்மை பொதுஜனங்களிடையே இருக்கும்வரை, பொதுவாழ்க்கை ஓர்போதும் தூய்மையடையமாட்டாது. பொதுவாழ்க்கையில் ஈடுபடும் மந்திரிமார், அரசாங்க உத்தியோகத்தர் இம்மியளவேனும் சந்தேகத்துக்கிடம் கொடுக்காதபடி நடத்தல்வேண்டும். அவர்கள் தமநெறிப்பினின்றும் பிறழ்ந்தால், பொதுஜனங்கள் தம்மை லேசில் விடமாட்டார்கள் என்ற பயம் அவர்கள் மனத்தில் சதா இருக்கத்தக்கதாக ஜனங்கள் தம் பொறுப்பை யுணர்ந்து கருமம் ஆற்றவேண்டும்.

இந்த இலங்கையில் உணவுக்கட்டுப்பாடு, துணிக்கட்டுப்பாடு முதலாம் கட்டுப்பாடுகள் அநுட்டானத்துக்கு வந்தபின், ஓர் சிலர் குபேர சம்பத்துப் படைத்துவிட்டனர் என்று பகிரங்கமாகக் கூறப்பட்டு வருகிறது. இந்தக் கூற்றுக்கு ஆதாரம் இல்லாமல் இல்லை. ஆனால், இதன் உண்மை பொய் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்பதையறிய சேனநாயக்கா அரசாங்கம் இதுவரை ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறதா? இற்றைக்குச் சில ஆண்டுகளுக்குமுன் நித்திய தரித்திரத்தில் ஆழ்ந்திருந்த ஓர் சில அதிகாரிகள் இன்று ஐஸ்வரியவான்களாகிவிட்டனர். ஏன், சில மந்திரிமார்தானும் அந்தநிலையை அடைந்திருக்கின்றனர் என்று சரியாகவோ பிழையாகவோ கூறப்பட்டு வருகிறது.

இற்றைக்குச் சின்னாட்களுக்கு முன், இந்த யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த சமதர்மக்கட்சிக் காரியதரிசி மிஸ்ரர் பீற்றர் கெனமன் இவ்விஷயமாகப் பிரஸ்தாபித்தார். இப்படியாகத் திடீரெனக் குபேரசம்பத்துப் படைத்துள்ளவர்களின் நிலைமை பற்றி விசாரணைபுரிய ஓர் சபை நியமிக்கவேண்டுமென்று தாம் பாராளுமன்றத்தில் பிரேரிக்கப்போவதாக அறிவித்தார். இது ஓர் நல்ல செய்தி. இலங்கைப் பொதுவாழ்க்கையில் தூய்மையை விரும்பும் எவரும் மிஸ்ரர் கெனமனின முயற்சிக்கு ஆதரவு கொடுப்பர் என்பதே எமது நம்பிக்கை.

கடிதம்

# ஈழத்தின் தேசீயக் கொடி

ஐயா,

இலங்கையைச் சட்டியாளுகிற ஐ.தே.க. தலைவர்கள் முதன்முதலாக தீர்த்துவைக்கவேண்டியவாறு உருக்கொண்டு இலங்கை முழுவதையும் அலைத்துக்கொண்டிருக்கிற விஷயம் இலங்கையின தேசீயக்கொடியை அமைப்பதாகும்.

இலங்கையின் தேசிய அமைப்பை வெளிக்காட்டத்தக்க ஒரு கொடியை ஆக்குவதற்கு முன்பதாக சிங்கள மக்களது இனக்கொடியாகிய வாளேந்திய சிங்கக் கொடியை இலங்கையின் தேசீயக் கொடியாக மாற்றவேண்டுமென சிங்கள மக்களிடையே எழுகின்ற கூக்குரலும், சிங்களப் பத்திரிகைகள் காண்பிக்கிற விறுவிறுப்பும் இலங்கையின் அமைதியைக் குழப்பிவிடத்தக்கன. இந்தச் சமயத்தில் ஐக்கிய தேசீயக்கட்சித் தலைவர்கள் சர்வதேசப் பொது ஒழுங்கினைக் கடைப்பிடித்து வேறுபட்ட பண்பாடுகளையுடைய நான்கு இன மக்களை உள்ளடக்கிய இலங்கையின் தேசீயக் கொடியை முழு இலங்கையும் ஏற்றுக்கொள்ளத்தக்க வண்ணம் அமைக்கவேண்டும். அல்லது இலங்கையின் தேசீயத்தின் பிதாக்களாக செனற்சபைக்குள்ளும் - செனற்சபைக்கு வெளியேயுமுள்ள அறிஞர்களைத் திரட்டி அவர்கள்மூலம் தேசீயக்கொடியை அமைக்கும் பணியை விட்டுவிடவேண்டும்.

ஐக்கியதேசீயக்கட்சியின் திறமையையும் அதன் பொது நோக்கையும் அளந்து பார்க்கத்தக்க ஒரு அளவுகோலாக தேசீயக்கொடி விஷயம் இருக்கிறது. ஐ. தே. க. குழுவில் வீற்றிருக்கும் திரு சுந்தரலிங்கம் திரு. நல்லையாவாகிய இரு தலைவர்களுக்கும் எனது கூக்குரல் கேட்குமானால் ஒரு செய்தி அறிவிப்பேன். இலங்கைக்குக் கொண்டுவரப்படும் தேசீயக்கொடி முழு இலங்கை மக்களுக்கும் செல்லுமா? அல்லது சிங்கள மக்களுக்கு மாத்திரம் செல்லுமா? சிங்கள மக்களுக்கு மாத்திரம் செல்லுமானால் நீங்கள் இலங்கையின் தேசீயத்தைக் கொன்ற பாவத்துக்கு தப்பமாட்டீர்கள். சிங்கள மக்களின் ஜாதிக்கொடியாகிய வாளேந்திய சிங்கக்கொடி இலங்கையின் தேசீயக் கொடியாக மாற்றப்பட்டால் அக்கொடிக்குக்கீழ் தமிழர்கள் வாழ்வார்களா? இலங்கைத் தமிழரின் ஜாதிக்கொடியாக வடஇலங்கையில் தமிழ் மன்னர்கள் நாட்டிய கொடியை மீண்டுமேற்றி அதன்கீழ் தமிழ் மக்கள் வாழப் புகுவார்களா? சிங்கள ஜாதிக்கொடியும் தமிழர் ஜாதிக்கொடியும் ஏற்றப்பட்டால் தேசிய சமுதாயம் என்பது மறைந்து 'சிங்கள இலங்கை' 'தமிழர் இலங்கை' என இலங்கை இருஉருவங்களாக மாறிஒன்றோடொன்று மாறுபட்டு இந்தியா பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் தங்கள் பிரசைகளுக்கு மரணக்குழி தோண்டுவதைப் போன்ற தொண்டில் இலங்கையை இறங்கிவிடும் இந்தப் பாவத்துக்கு அடிகோலுகிற சிங்களப் பத்திரிகைகளுக்கும் அவற்றின் பின்னின்று பூர்க்கக்குரலில் கூக்குரலிடுகின்ற சில சிங்களவர்களுக்கும் மருந்துசெய்கிற வைத்தியனாக திரு. சேனநாயக்கா மாறுவிட்டால் நாளைக்கு தோன்றப்போகிற இலங்கைக்கு அவர் தேவையில்லாதவராகி விடுவார் இதே சமயத்தில் தமிழ்க்காங்கிரசின் தலைமையைக் கொடுத்து இலங்கைக்கும் தமிழர்களுக்கும் வழிகாட்டச் சொல்லி திரு G. G பொன்னம்பலம் அவர்களைத் தேசம் கேட்டுக்கொண்டிருக்கிறது, அவருக்கு முன்னிருந்த தமிழ்த் தலைவர்களாகிய சேர். அருணாசலம், சேர் இராமநாதன் அவர்களுடைய வழிகளை விட்டகலாமல் இலங்கையின் தேசீய தர்மத்துக்கு இலங்கைத் தமிழர்கள் எவ்வளவு விட்டுக்கொடுத்தார்களென்பதை தலைவர் பொன்னம்பலம் அவர்கள் காண்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறார். இதேநோக்கத்தில் திரு ஸ்ரீநிசங்கா திரு. தகநாயக்கா, சமசமாஜித்தலைவர்கள் இலங்கையின தேசியக் கொடிக்கு உருவங்கொடுப்பதில் தங்கள் நெஞ்சைத் திறந்து காண்பிப்பார்களா.

இங்ஙனம்

சி. சரவணமுர்

புங்குடுதீவு

2—11—47.

# திருச்சி ரேடியோ

புதன் நவம்பர் 19

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 கும்பகோணம் வி பி ராஜேஸ்வரி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 ரேடியோ வாத்யகோஷ்டி 8 30 வி ஏ நாராயணன் பாட்டு 9 முடிவு

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 கும்பகோணம் வி பி ராஜேஸ்வரி பாட்டு 2 தமிழில் செய்திகம் 2 05 கும்பகோணம் வி பி ராஜேஸ்வரி பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை சாட்டியக்குடி ஆர் மீனாட்சிசுந்தரம் பாட்டு 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராமநிகழ்ச்சிகள் 7 அழகின் கவர்ச்சி நாடகம் 7 15 சித்ரகானம் இசைத் 7 30 தமிழில் செய்திகள் 7 45 பிக்கர் அபிவிருத்தித் திட்டம் 8 வி ஏ நாராயணன் பாட்டு 8 30 சாட்டியக்குடி ஆர் மீனாட்சிசுந்தரம் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 ஆங்கிலப் பேச்சு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு

வியாழன் நவம்பர் 20

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 ராதா ஜயராம் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலை இசை இசைத்தட்டு 8 30 திருவையாறு டி வைத்தியநாதய்யர் பாட்டு 9 முடிவு

கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பெண்ணுலகம் 2 தமிழில் செய்திகள் 2 05 குரல்வகை இசைத்தட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 ராதா ஜயராம் பாட்டு 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் இசைத்தட்டு 7 15 செய்தி விளக்கம் 7 30 தமிழில் செய்திகள் 7 45 டி கே ஜயராமய்யர் வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 ரேடியோ நாடகஇசை 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் 9 45 திருவையாறு டி வைத்தியநாதய்யர் பாட்டு 10 30 முடிவு.

வெள்ளி நவம்பர் 21

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 திருவிழந்தூர் ஏ கே கணேசபிள்ளை பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 திருச்சி வாத்ய கோஷ்டி 8 30 வி ஜகதீசன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 திருவிழந்தூர் ஏ கே கணேசபிள்ளை பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 திருவிழந்தூர் ஏ கே கணேசபிள்ளை பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 மதுரை பி எம் வெங்கட கிருஷ்ணன் பாட்டு 5 40 குரான் ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 மதுரை பி எம் வெங்கடகிருஷ்ணன் பாட்டு 7 30 தமிழில் செய்திகள் 7 45 நமது தபால்பெட்டி 8 திருவிழிமிழலை எஸ் கோவிந்தராஜபிள்ளை "சோதரர்கள் நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 கிருகப்ரவேசம் நாடகம் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 குரல்வகை இசைத்தட்டு 10 நீங்கள்கேட்டவை இசைத்தட்டு 10 30 முடிவு.

# இடு எழுதியாயிற்று

## சமசமாஜிகள் கருத்து

இலங்கைக்கும் இங்கிலாந்துக்கும் இடையே ஏற்பாடான உடன்படிக்கைகள்பற்றி இடதுசாரிக்கட்சியினரும் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ்வாதிகளும் இலங்கை இந்தியக் காங்கிரஸ்காரரும் அதிர்ப்தி தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த உடன்படிக்கையினால், திருக்கோணமலையை வெள்ளைக்காரனுக்கு சேனநாயக்க அரசாங்கம் நிரந்தரஈடு எழுதியதாக முடிந்ததென்றும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தொடர்பென்பது இல்லாமல் இலங்கை தனித்துவாழவேண்டும் என்றும் சமசமாஜிகள் தலைவர் டக்ரர் என். எம். பெரீரா அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்.

காலவரையில்லாமல், இங்கிலாந்துக்கு இங்கே ராணுவவசதிகள் ஏற்படுத்துவது பொருந்தாது; பிரிட்டிஷ அரசாங்கத்தின் வாலில் தொங்கும் நிலைதான் இலங்கைக்கு இப்போது ஏற்பட்டுள்ளதன்றிப் பூரண சுயராச்சியமல்ல. இந்த உடன்படிக்கையினால், பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் தம் ஏகாதிபத்தியத் திமிரை, இந்துசமுத்திரத்தில் இனியும்காட்டிக் கும்மாளம் போடமுடியும் என்று போல்ஷெவிக் லெனின்கட்சித் தலைவர் டக்ரர் கொல்வின் ஆர். டி சில்வா அபிப்பிராயம் தெரிவித்தார்.

பொதுவுடைமைக்கட்சிக் காரியதரிசி மிஸ்ரர் பீற்றர் கெனமன் பின்வருமாறு தெரிவித்தார்:-

"பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து விலகுவதுதான் உண்மைச் சுயராச்சியம். இந்தியாவுடன் நாம் ஒற்றுமைபூண்டு, அதன் ஒத்துழைப்புடன், எம பாதுகாப்பை நாம் பலப்படுத்தவேண்டும்."

# மாகாணப் பொறுப்பாட்சி

## இலங்கையின் எதிர்கால அரசியல்

இலங்கையை மூன்று மாகாணங்களாகப் பிரிக்கவேண்டும், ஒன்று கண்டிச் சிங்களரது மாகாணம்; மற்றது கீழ்நாட்டுச் சிங்களவரது மாகாணம்; ஏனையது தமிழர் மாகாணம்; இம்மாகாணங்களுக்குத் தனித்தனி மாகாணச் சுயாட்சி வழங்கவேண்டும். பின் இந்த மூன்றும் சேர்ந்து மத்திய ஆட்சி நடத்தவேண்டும். இப்படியான ஓர் அரசியல் ஏற்பட்டால்தான், இலங்கையில் இன்று தோன்றியுள்ள அதிர்ப்தி மறைந்துவிடும்.

என்றிவ்வாறு சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நிகழ்ந்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கூட்டத்தில் காங்கேசன்துறைப் பிரதிநிதி திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூறினார்.

இக்கூட்டத்துக்கு ஆயிரக்கணக்கில் பொதுஜனங்கள், சமூகமளித்தனர். பாராளுமன்றத்தில் தமிழ்க் காங்கிரஸ் பிரதிநிதிகளாயிருப்பவர்களும் பிரசன்னமாயிருந்தார். திரு இ சிவகுருநாதர் தலைமை வகித்தார்.

திரு ஜீ ஜீ. பொன்னம்பலம் பேசுகையில், இன்று மிஸ்ரர் சேனநாயக்காவின் கோஷ்டி அதிகாரத்துக்கு வந்த விதத்தைப் பலமாகக் கண்டித்து, சேனநாயக்க அரசாங்கம் பொதுசனங்களின் நம்பிக்கையைப் பெற்றதல்ல என்றும், இன்று சுயராஜ்யம் பெற்றுவிட்டதாகக் கூறுவதெல்லாம் வீண் பகட்டுரைகளே என்றும் கூறினார்.

பாராளுமன்ற அங்கத்தவர்கள் திருவாளர்கள் க. கனகரத்தினம், எள். சிவபாலன், வி. வன்னியசிங்கம் என்பவர்களும் செவ வியர் எஸ். அருளானந்தம் முதலியோரும் பேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவக் கிரியை விளக்கம்

இது சைவ நன்மக்கள் தாம் செய்யும் சமயக் கிரியைகளின் உட் [illegible]ருத்தையும், நோக்கங்களையும் எடுத்து இலகுவில் விளக்கும் தமிழ் வசன நூலாகும்., இதனை எழுதியவர்:

**ஆசிரியர், திரு. சு. சிவபாதசுந்தரம், (B.A) அவர்கள்**

இதன் இரண்டாம் பதிப்பு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரின் வெளியீடாக வுள்ளது.

விலை சதம் 50 (8 அணா)

வண்ணார்பண்ணை 4-11-47

மனேஜர்
யாழ்ப்பாணம், சைவப்பிரகாசயந்திரசாலை



## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும்தீர்ந்து, தேகத்துக்குப்பலம், உண்டாக்கும்.

ஒருருத்தல் விலை ரூபா 25
அரைருத்தலுக்கு ரூபா 12-50
கால்ருத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**

நி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to 1—4—48



## கந்தசாமி வைத்தியர்
### அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக் கிருதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற் புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பணிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மல சலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் காற் களஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்

**கால் ருத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ. பி யில் அனுப்புவோம்.

விலாசம் :

ஆயுள்வேத சிவசோதி மெடிக்கல்ஹோல்
— வல்வெட்டித்துறை —

Std .5 1 7-47—30-6-48 (செ.



## இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

**இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்**

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.
நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்வின் ட்ரஸற் கம்பனி.
லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கினேஸ வங்கி.
கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்), வதுளை
யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242, ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10,000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**T. S. முத்துலிங்கசாமி**
ஏஜெண்டு,

Std.29 1-8—30-7-48



## மலேயாவுக்குக் கப்பல் பிரயாணம்

யாழ்ப்பாணம்—சென்னபட்டணம்—பினாங்—சிங்கப்பூர்

சென்னபட்டணம் மார்க்கம் பினாங், சிங்கப்பூருக்கு மாதம் இருமுறையும் நேரே சிங்கப்பூருக்கு ஒருமுறையும் வசதிகளடங்கிய,

**கப்பல் பிரயாணச் சீட்டு**

எம்மூலம் 1947 நவம்பர் மாதம் தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்

**எஸ். ஆர். எஸ். நாதன்**
21/3, ஸ்ரான்லி ரேட் :: யாழ்ப்பாணம்

Std 22 6-6-47—6-6-48



மலேயாவுக்கு நாகபட்டணம் மார்க்கமாக

## கப்பல் சீட்டு

[ மாசமிருமுறை கப்பல்கள் போகின்றன ]

யாழ்ப்பாணமிருந்து றேயில்வே ரிக்கற், சாப்பாடு, லக்கேஷ்சார்ஷ் இருப்பிடச் செலவு எல்லாம் உட்பட, நாகபட்டணமிருந்து பினாங் செல்ல டெக் ரிக்கற் ரூபா 130-க்கு எங்கள்மூலமாக பெற்றுக்கொள்ளலாம்

**வேறு செலவு உங்களுக்கு இல்லை**

பல நூற்றுக் கணக்கானோர் எங்கள் மூலமாகப் பிரயாணஞ் செய்து திருப்தியடைந்துகொடுத்த நற்சாட்சிகள் அநேகமுண்டு.

**வடஇலங்கையில் இவ்வகையில் முதல்ஸ்தானம் வகிக்கிறோம்**

எங்களிடம் மற்ற விபரங்களை நேரிலோ லெட்டர் மூலமோ தெரிந்துகொள்ளலாம்.

**ஸ்ரீ கதிர்வேல் அன்கோ,**
252, காங்கேசன்துறை ரேட், :: சிவன்கோவிலடி, யாழ்ப்பாணம்
தந்தி (Srivel) :: பிராஞ்சு: நாகபட்டணம்.

3 2—9—47&28 2 48



வியாபாரத்திற்கழகு விளம்பரஞ் செய்தல்



## கிருஷ்ணன் றாது

**சருக்கவுரை**

வில்லிபாரதம்—உத்தியோக பருவத்துள்ளதாகிய கிருஷ்ணன் றாது சருக்கம், பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய பொழிப்புரை சரித்திரத்தொடர்பு, நூலாசிரியர்வரலாறு என்னுமிவற்றுடன் யாழ்ப்பாணம் நாவலர் கலாசாலைத் தலைமை யாசிரியர் வித்துவான் ந சுப்பையபிள்ளை யவர்கள் எழுதிய விசேடக் குறிப்புரையுஞ் சேர்த்து ஐந்தாம் பதிப்பாக அச்சிட்டு வெளிவந்துளது; இச்சருக்கத்திற்சிலபாகம் இப்பொழுதுதமிழ் ஆங்கில எஸ். எஸ் ஸீ பரீட்சைக்குப் பாடமாக விதிக்கப்பட்டுள்ளன

விலை 1 ரூபா 75 சதம் (ரூபா 1 அணா 12)

**மனேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை**
வண்ணார்பண்ணை :: யாழ்ப்பாணம்
20—10—47.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna. on Tuesday. November 18. 1947

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org